முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : **1394**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.07.2023,** திங்கட்கிழமை

1. திக்கெட்டும் பரவட்டும் அரங்கன் புகழ்
தேசமெங்கும் வளரட்டும் அரங்கன் படை
பக்குவங்கள் கூடி உலக மக்கலெல்லாம்
பணிந்துவந்து அரங்கன் பறைசாற்றட்டும்
2. பறைசாற்றட்டும் என்று கூறி இனிதே
பாருலகில் சுப்ரமணியர் யானும்
பெருமைபட அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 08 ம் நாள், 24.07.2023, திங்கட்கிழமை)
பிசகின்றி தொடர்ந்து அருளிடுவேன்
3. அருளவே அரங்கன் தொண்டர்படை
அகிலத்தை மாற்றுவது உறுதியாகும்
இருள்விலகி இந்த கலியுகத்தில்
இனிதே சரவணச்சுடர் பரவுவது உறுதி என்பேன்
4. உறுதிபட அரங்கன் சேவை
உலகை மாற்றி காத்தருளும்
கருதிவந்து அரங்கனோடு இணைந்தவர்க்கு
கலியில் ஞானசித்தி உறுதியாகும்
5. ஆகவே அரங்கா என தொழுதேற்றி
அகிலத்தில் ஆறுமுகன் என் வழிபாட்டை
வரங்களாக அரங்கனிடம் தீட்சைபெற்று தொடருவோர்
வையகத்தில் வலுவான ஞானிகளாக
6. ஆகவே ஆக்கம் தேறி இனிதே
அகிலத்தில் வருங்கால மாற்றத்தை
மகிழ மக்களுக்குத் தந்து
மண்ணுலகில் ஞான ஆட்சியும் நிறுவக்கூடும்

7. கூடவே கூடாத எதிர்மறைகளெல்லாம்
குவலயத்தை விட்டு தானாய் ஓடி
ஈடேற்றம் நல்லோர்கள் ஆட்சியாக
இந்த உலகம் ஞானவான்கள் ஆட்சியாக உருப்பெறக்கூடும்

8. கூடவே அரங்கனைத் தொடர்ந்து குவலயம் ஞானம் பயின்று
நாடெங்கிலும் ஞானவான்கள் படை ஞானிகள் படையாக உருமாற்றங்கண்டு
கண்டுமே கலியுகம் ஞான யுகமாக
கந்தவேலன் என் கருணைப்பட ஆற்றல் கூடி சிறக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–